# உடன்பிறப்பே... 76

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த கே.என்.சாமிநாதன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# கே.என்.சாமிநாதன் “தமிழ் இனத்துச் சுடரொளி!”

ஓவியம் : ரவி பேலட்



1949-ஆம் ஆண்டு கழகத்தின் தொடக்கவிழா அறிவிப்பும், முதல் பொதுக்கூட்டமும் சென்னை, ராபின்சன் பூங்காவில், ஆயிரக்கணக்கான மக்கள் பங்குகொள்ள நடந்தது. கூட்டத்துக்குத் தலைமை தாங்கியவர் பெத்தாம்பாளையம் பழனிசாமி. குடந்தை கே.கே.நீலமேகம், நாவலர், கலைஞர், கே.ஏ.மதியழகன், என்.வி.என் என மூத்த முன்னோடிகளுடன், அண்ணாவின் வழிகாட்டலை ஏற்று கழகப் பணியாற்றத் துடித்த பல நூறு தளகர்த்தர்களும் நிரம்பி இருந்தனர். அவர்களில் ஒருவர், ஆற்றல் வாய்ந்த பேச்சாளர், கொங்குப் பகுதியில் செல்வாக்குமிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர் எனப் பெயரெடுத்த குட்டப்பாளையம் சாமிநாதன் குறிப்பிடத்தக்கவர். அவர் பெத்தாம்பாளையம் பழனிசாமிக்கு உறவினர் என்பது கூடுதல் சிறப்பு. ஈரோடு, காங்கேயம் பகுதிக் கழகத்தினருக்கு அவர் கே.என்.எஸ்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் அமைச்சராக இருந்த சர்க்கரை மன்றாடியார் உட்பட அரசியல் பாரம்பரியமிக்க குடும்பத்திலிருந்து, திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு, அதற்காக களப்பணியாற்றியது, சாதாரணமாக நிகழ்ந்து விடவில்லை. ஆனால், குட்டப்பாளையம் சாமிநாதன் வீட்டின் சட்ட திட்டங்களை மீறி, அரசியல் செய்தவர்.

## திராவிடர் கழகச் செயல்வீரர்

காங்கேயம் அருகே குட்டப்பாளையத்தை பூர்வீகமாகக் கொண்டவர். பெற்றோர் நல்லதம்பி - பழனியம்மாள், அவர்களுக்கு ஒரே மகனாக 1923- ஆம் ஆண்டு, செப்டம்பர் 5 -ஆம் தேதி பிறந்தவர். உயர்நிலைப் படிப்பு வரை கொடுமுடியில் பயின்றார். சுயமரியாதை இயக்க ஈடுபாடு காரணமாக, திராவிடர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். 1949-ஆம் ஆண்டு கழகத்தின் தொடக்கக் கால உறுப்பினராகத் தன்னைப் பதிவுசெய்து கொண்டு இயங்கத் தொடங்கினார்.

அந்த வகையில், திராவிடர் கழகப் போர்வாளாக விளங்கிய தளபதி அர்ச்சுனன், பெத்தாம்பாளையம் பழனிசாமி, ஈ.வி.கே. சம்பத், ஈரோடு கைவல்யம் ஆகியோருடன் நெருங்கிய நட்பு கொண்டு இருந்தார். திராவிட இயக்கத்தின் பாசறையாக விளங்கிய ஈரோட்டில், பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு கழகத்தின் செயல் வீரர் ஆனார், சாமிநாதன்.

பாமரருக்கும் புரியும்படி நகைச்சுவையாகப் பேசக்கூடிய சாமிநாதன், கழகத்தின் தொடக்கக் காலங்களில், கொங்கு மண்டலம் முழுவதும் சுற்றி கழகம் வளர்த்தார். 1957-ஆம் ஆண்டில் நாமக்கல் தொகுதியில் கழகத்தின் சார்பில், ஈ.வி.கே. சம்பத் போட்டியிட்டபோது, அவருக்காக களப்பணியாற்றி நின்றவர் சாமிநாதன்.

## முதல் வேட்பாளர்

1967-ஆம் ஆண்டில், கழகம் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிவிப்பதற்கு முன்பே, குட்டப்பாளையம் சாமிநாதன் அவர்களை, வெள்ளக்கோவில் தொகுதி வேட்பாளராக, அப்பகுதிக்குச் சுற்றுப்பயணம் சென்றபோது அறிவித்தார், பேரறிஞர் அண்ணா. அந்தத் தேர்தலின்போது கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்ட முதல் வேட்பாளர் அவர்தான்.

தனக்கு வாய்ப்பு வேண்டும் எனக் கேட்காமலேயே, வந்த வாய்ப்பினை வெற்றிக் கனியாக்கினார். தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளரைவிட 21 ஆயிரத்து நானூற்று ஐம்பத்து இரண்டு வாக்குகள் கூடுதலாகப் பெற்று சாதனை செய்தவர் சாமிநாதன்.

அண்ணா முதல்வராக இருந்தபோது கால்நடை அபிவிருத்திக் குழுவின் உதவித் தலைவராகவும், தமிழ்நாடு தானிய சேமிப்புக் கிடங்கு இயக்குநராகவும் சாமிநாதன் அவர்களை நியமித்தார். ஈரோடு மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர், தாராபுரம், குளத்துப்பாளையம் கூட்டுறவு நூற்பு ஆலை தலைமைப் பொறுப்பு என கலைஞர் அளித்த பொறுப்புகளிலும் திறம்படப் பணியாற்றி கழக உணர்வுடன் செயல்பட்டவர்.

## சிறையும் விடுதலையும்

1976-ஆம் ஆண்டு, மிசா நெருக்கடியின்போது கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். அந்த அடக்குமுறைக்கு அஞ்சாமல், ஈரோட்டில் நடைபெற்ற கழகச் செயல்வீரர்கள் கூட்டத்தில், அவர் ஆற்றிய ஆவேச உரைக்காக அடுத்த நாளே கைது செய்யப்பட்டார். அவர் சிறையில் அடைக்கப்பட்டு நான்கு மாதம் கழித்துத்தான் முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் சிறைபட்டிருக்கிறார். கண்ணப்பன் சிறைக்கு வந்ததைப் பார்த்த கே.என்.எஸ், அதற்காக வருத்தப்பட்டு கண்ணீர் வடித்துள்ளார். “அந்தக் கண்ணீர் கண்ணப்பனுக்காக அல்ல, கலைஞருக்குத் துணையாக இருந்தவரையும் கொண்டு வந்து விட்டார்களே” என அந்தக் கண்ணீர் காரணம் கொண்டிருந்தது.

மிசாவில் கோவை சிறையில் ஒன்றரை ஆண்டுகள் அடைக்கப்பட்டிருந்தார். அப்போது இவரது உறவினர்கள் பலரும், தி.மு.கவை விட்டு வெளியேறினால் விடுதலைக்கு முயற்சி செய்கிறோம் என அழுத்தம் கொடுத்துள்ளனர். ஆனால், உயிர் உள்ளவரை தி.மு.கழகம், கலைஞர், தலைமைக்குக் கட்டுப்படுவது என அந்த ஆசைவார்த்தைகளைப் புறந்தள்ளி இருக்கிறார்.

மிசா கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டபோதும், கே.என்.எஸ். அவர்களின் விடுதலை மட்டும் தாமதமானது. அப்போது நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில், பழனி தொகுதியில் சி.சுப்பிரமணியனை எதிர்த்து கே.என். சாமிநாதன் போட்டியிடுவார் என அறிவித்தார் கலைஞர். சிறையில் இருப்பவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதால், அடுத்த நாளே அவர் விடுவிக்கப்பட்டார்.

கொங்கு வேளாளர் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கான முயற்சி, வெள்ளக்கோவில் தொகுதியின் வறட்சியைப் போக்கிட, பரம்பிக்குளம் ஆழியாறு விஸ்தரிப்புத் திட்டம், வட்டமலைக்கரை நல்லதங்காள் ஓடை நீர்த்தேக்கம் கொண்டுவரும் முயற்சி என அவர் பணிகள் இன்றும் நினைவுகூரத்தக்கவை.

## தலைதாழாச் சிங்கம்

1986-ஆம் ஆண்டு அவர் உடல்நலம் சரியில்லாத நிலையில், “எங்கள் தலைவர் மீண்டும் பதவிக்கு வரும் காலம் நெருங்கி விட்டது. அதைப் பார்க்க நான் உயிரோடு இருக்க மாட்டேன் போலத் தெரிகிறது” எனக் கூறியவர், மே 24 அன்று தனது இயக்கத்தை நிறுத்திக் கொண்டார். கழகத்தினர் திரளாக நின்று அக்கொள்கைக் குன்றை வழியனுப்பி வைத்தனர்.

“கொங்குச் சீமையின் தலைதாழாச் சிங்கமாக, தன்மான முரசாக, தமிழ் இனத்துச் சுடரொளியாக வாழ்ந்த குட்டப்பாளையத்தார்” என அஞ்சலிக் குறிப்பு எழுதி இருந்தார் கலைஞர். அப்போது ஈரோட்டில் நடைபெற்ற கழகத்தின் மாநில விவசாயிகள் மாநாட்டு அரங்கிற்கு கே.என்.சாமிநாதன் பெயரைச் சூட்டியது தலைமைக் கழகம்.

அப்போது வெளியிட்ட நினைவு மலரில் கலைஞரின் குறிப்பாக, “கொங்குச் சீமையின் பெரும் குடும்பத்துப் பிள்ளையாகத் தோன்றியவர்

**ஈரோட்டில் நடைபெற்ற கழகத்தின் மாநில விவசாயிகள் மாநாட்டு அரங்கிற்கு கே.என்.சாமிநாதன் பெயரைச் சூட்டியது தலைமைக் கழகம்.**

எனினும், நமது திராவிட இயக்கக் குடும்பத்தில் மிக எளிமையாகவும், இனிய இயல்பு வாய்ந்தவராகவும், எதையும் தாங்கும் மன உறுதி கொண்டவராகவும் பழகி பலரது இதயங்களில் இடம் பெற்றவர். ஆணவம், அலட்சிய மனப்பான்மை, இது போன்ற ஆகா மாண்புகள் அவரை என்றுமே அண்டியதில்லை” எனப் போற்றியிருந்தார்.

அதுமட்டுமல்ல, ‘அவரது புகழைப் போற்றி, அவரது வழித் தோன்றல்கள் அவர் காத்த கொள்கை காத்திட, கச்சை கட்டுவர் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு’, என 1986-ஆம் ஆண்டு ‘அன்பகம்’ முகவரியில் இருந்து எழுதி இருந்தார். அவரது குடும்பத்தில் இருந்து இன்று வழித்தோன்றல்கள் கழகம் காக்க, கச்சை கட்டி நிற்கின்றனர். கொள்கை வழித் தோன்றல்களும் கழகம் காக்க கே.என்.எஸ். வழிகாட்டுவார்.

**...துடிக்கும்**

## பகுத்தறிவுக் கையேடு!



சுயமரியாதை இயக்க நூற்றாண்டு (1925 - 2024), பெரியாரின் 146-ஆம் ஆண்டு பிறந்த நாள் ஆகியவற்றைக் கொண்டாடும் வகையில் ‘விடுதலை’ சிறப்பு மலரை, திராவிடர் கழகத்தின் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் வெளியிட்டுள்ளது. நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்களின் வாழ்த்துடன் தொடங்கும் நூலில், ஆசிரியர் வீரமணி அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தங்களது வாழ்த்துகளையும், வரலாற்றையும் பகிர்ந்துள்ளனர்.

தந்தை பெரியாரைப் பற்றியும், சுயமரியாதை இயக்கத்தின் நோக்கம், தாக்கம் அதன் வழியாக ஏற்பட்ட மறுமலர்ச்சி குறித்தும், பல ஆளுமைகள் கட்டுரைகளைப் பகிர்ந்துள்ளனர்.

திராவிடர் இயக்கம் குறித்து ‘குடி அரசு’, ‘விடுதலை’ இதழ்களில் வெளிவந்த முக்கியக் கட்டுரைகள், கலைஞர், பேராசிரியர் ஆகியோரின் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

‘பெரியார்’ பட்டம் கொடுத்த பெண்கள் மாநாடு தொடங்கி, பெரிதும் அறியப்படாத மறைந்த சுயமரியாதை இயக்கத் தீரர்கள் பற்றி அறிமுகம், வைக்கம் போராட்டத்தில் பெரியாருக்கும் - காந்திக்கும் இடையில் இருந்த முரண்பாடுகள், பெரியாரின் மலேசிய மற்றும் பர்மா பயணங்கள் குறித்த குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன.

கோயில் நுழைவுப் போராட்டங்கள், திராவிடர் கழகம் நடத்திய குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழா, பெரியார் சொன்ன குட்டிக் கதைகள், தேவதாசி ஒழிப்புச் சட்டம், ராஜாஜி கலந்துகொண்ட சுயமரியாதைத் திருமணம் எனப் பல தகவல்கள் பெட்டிச் செய்திகளாக வாசிப்பு அனுபவத்தைத் தூண்டுகின்றன.

பகுத்தறிவுப் பெட்டகமாக வந்துள்ள ‘விடுதலை மலர்’, அனைவரிடமும் இருக்க வேண்டிய அவசியமான கையேடு.

## :ப்ளாஷ்பேக்



### குடும்ப விழாவைச் சிறப்பித்த தளபதி!



பி.லாலா சங்கரபாண்டியன்

1995-ஆம் ஆண்டு நான் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தபோது, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களை சங்கரன்கோவில் ஒன்றியத்திற்கு வரவழைத்து, நிகழ்ச்சி நடத்தினேன். கட்சி நெருக்கடியைச் சந்தித்த நேரம் அப்போது, என் மகன், மகள் ஆகியோரின் காதணி விழாவையும் தளபதி அவர்கள் தலைமையில், நடத்தினேன். தளபதி அவர்கள், எங்கள் குடும்பத் தலைவர் போல் நிகழ்ச்சியை நடத்திக் கொடுத்து உரையாற்றினார். இவை, அப்போது எடுக்கப்பட்ட படங்கள்.

**- பி.லாலா சங்கரபாண்டியன், ஒன்றிய கழகச் செயலாளர், சங்கரன்கோவில் தெற்கு ஒன்றியம், தென்காசி வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### மாநாடுப் பந்தலுக்கு நெருப்பு!

1984-ஆம் ஆண்டின் தொடக்கத்தில், கழகத்தின் மாவட்ட மாநாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்றன. ஜனவரி 7 மற்றும் 8 தேதிகளில் கரூரில், திருச்சி மாவட்ட ஆறாவது மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டின்போது, கலைஞர் பேசுவதற்கு முன், மாநாட்டின் முகப்பில் கழக வளர்ச்சியைக் கண்டு அசூயை கொண்ட சிலர் தீ வைத்தனர். தீ உடனடியாக அணைக்கப்பட்டதுடன், மாநாடு தடைபடாமல், சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

607

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131